# கடலூர் பெருநகராட்சி

2018ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05–ம் நாள் திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு இந்நகர்மன்ற அவசரக் கூட்டம் கீழ்கண்ட பொருளை முடிவு செய்ய நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும்.

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 05.02.2018

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் பெருநகராட்சி.

*பொருள்*

| | |
|---|---|
| 1. | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட நகர்ப்புற ஊரக உள்ளாட்சி பகுதிகளுக்கு கூடுதலாக குடிநீர் வழங்க தமிழ்நாடு குடிநீர் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்ட செயலாக்கத்தில் SCADA அமைப்பு அமைத்து செயலாற்றுவதற்கு திருத்திய மதிப்பீட்டுத்தொகை ரூ.955.85 இலட்சம் ஆகும் எனவும் அவற்றில் கடலூர் பெருநகராட்சி பகுதிகளில் SCADA அமைப்பு செயல்படுத்த ரூ.776.13 இலட்சம் கூடுதல் செலவினம் ஆகும் எனவும், மேலும் SCADA அமைப்பு கூட்டாக செயல்படுத்த உத்தேசிக்கப்பட்ட ஆண்டு பராமரிப்பு தொகை ரூ. 28.45 இலட்சம் ஆகும் எனவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>மேற்படி SCADA அமைப்பு கடலூர் பெருநகராட்சி பகுதியில் செயல்படுத்த ஆகும் கூடுதல் செலவினத் தொகை ரூ.776.13 இலட்சம் மற்றும் SCADA அமைப்பு கூட்டாக செயல்படுத்த உத்தேசிக்கப்பட்ட ஆண்டு பராமரிப்பு தொகை ரூ. 28.45 இலட்சத்தில் நகராட்சியின் பங்கு தொகை பொது நிதியிலிருந்து வழங்கவும் மேற்படி தொகை தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்கு வழங்க இசைவு தெரிவித்து கடிதம் அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு.– | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. SCADA அமைப்பு கடலூர் பெருநகராட்சி பகுதியில் செயல்படுத்த ஆகும் கூடுதல் செலவினத் தொகை ரூ.776.13 இலட்சம் மற்றும் SCADA அமைப்பு கூட்டாக செயல்படுத்த உத்தேசிக்கப்பட்ட ஆண்டு பராமரிப்பு தொகை ரூ. 28.45 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மேற்படி தொகை தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்கு வழங்க இசைவு தெரிவித்து கடிதம் அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| ந.ம.தீ. எண் 2084 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 2. | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட 45 வார்டுகளின் எல்லைகளை தமிழ்நாடு மறுவரையறை ஆணையத்தில் வரப்பெற்றுள்ள சுற்றறிக்கை எண் D – 11/2017 மற்றும் ந.க.எண் 3174/2017/தே.பொ.1, நாள் 13.12.2017ல் தெரிவித்துள்ள வழிமுறைகளின்படி எல்லைகள் மறுவரையறை செய்து இந்நகர்மன்ற தீர்மான எண் 2036 நாள் 15.12.2017 ஒப்புதலுடன் வார்டுகளின் வரைவு பிரேரணையை மாவட்ட மறுவரையறை அதிகாரி / மாவட்ட ஆட்சித் தலைவர் கடலூர் அவர்களின் வழியாக துறைத்தலைவர் அவர்களின் ஒப்புதலுடன் மறுவரையறை ஆணையத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன்பேரில் உறுப்பினர் செயலர், மறுவரையறை ஆணையம் அவர்களின் ந.க. எண் 3174/17/தே.பொ 1–3 நாள் 28.12.2017 கடிதத்தின்படி ஆணையத்தால் சரிபார்க்கப்பட்ட வரைவு மறுவரையறை கருத்துருக்களை / வரைபடங்களை வெளியீடு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, வெளியிடப்பட்டதில் பொதுமக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் என 149 எண்ணிக்கையில் கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. அதனை தொடர்ந்து 24.01.2018 அன்று ஆணையர், தமிழ்நாடு மறுவரையறை ஆணையம் அவர்களின் தலைமையில் வார்டு எல்லை மறுவரையறை தொடர்பாக நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் தெரிவித்துள்ள அறிவுரைகளின்படி வரப்பெற்ற 149 மனுக்களின் மீது ஆய்வு செய்து உரிய திருத்தம் செய்து இறுதி வார்டு மறுவரையறைக்கு உரிய படிவத்தில் தயார் செய்து மாவட்ட மறுவரையறை அதிகாரி / மாவட்ட ஆட்சித் தலைவர் கடலூர் அவர்களின் வழியாக துறைத்தலைவர் அவர்களின் ஒப்புதலுடன் மறுவரையறை ஆணையத்தின் இறுதி ஒப்புதலுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. |
| அ.கு.– | மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் அளிக்கலாம். |
| ந.ம.தீ. எண் 2085 | ஒப்புதல் அளிக்கப்பட்டது. |

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 05.02.2018

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் நகராட்சி.

## <u>கடலூர் பெருநகராட்சி</u>

**2018ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07–ம் நாள் புதன்கிழமை காலை 11.00 மணிக்கு இந்நகர்மன்ற அவசரக் கூட்டம் கீழ்கண்ட பொருளை முடிவு செய்ய நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும்.**

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 06.02.2018

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் பெருநகராட்சி.

*பொருள்*

| | |
|---|---|
| 1. | மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் அவர்களின் ஆய்வுக்கூட்ட நடவடிக்கை Roc. No.WORKS/01/2018, நாள் 22.01.2018–யில், கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட அழகப்பா நகர் பகுதியில் தேங்கும் மழைநீர் கெடிலம் ஆற்றில் கொண்டு செல்வதற்கு ஏதுவாக நெல்லிக்குப்பம் சாலை கருமாரியம்மன் கோவில் பகுதியிலிருந்து கெடிலம் ஆற்றுப் பகுதிவரை மூடிய மழைநீர் வடிகால்வாய் குழாய் அமைக்கும் பணி கடலூர் அரசு தலைமை மருத்துவமனை வழியாக அமைக்கவும், அதற்குண்டான தொகையினை இந்நகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்படும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இதர இனங்களுக்கான செலவினத் தொகையிலிருந்து மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டும் பணி ரூ. 42.00 கோடி மதிப்பீட்டில் இரண்டு சிப்பங்களாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றிக்கான மதிப்பீட்டில் சிப்பம் 1 ல் உள்ள இதர இனங்களுக்கான செலவினம் ரூ. 29.59 இலட்சம் மற்றும் சிப்பம் 2 ல் உள்ள இதர இனங்களுக்கான செலவினம் ரூ. 40.64 இலட்சம் ஆக மொத்தம் ரூ.70.23 இலட்சம் இதர இனங்களுக்கான செலவினத் தொகை (Lumsum amount) உள்ளது.<br>மேற்படி மாவட்ட ஆட்சித் தலைவர் கடலூர் அவர்கள் தெரிவித்துள்ளதற்கிணங்க நெல்லிக்குப்பம் சாலை கருமாரியம்மன் கோவில் பகுதியிலிருந்து கெடிலம் ஆறு வரை அரசு தலைமை மருத்துவமனை வழியாக மூடிய மழைநீர் வடிகால்வாய் குழாய் |

அமைக்கும் பணி (Construction of closed storm water pipeline) ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டும் பணியில் தெரிவிக்கப்பட்டுள்ள ரூ.70.23 இலட்சம் இதர இனங்களுக்கான செலவினத் தொகை (Lumsum amount) யிலிருந்து மேற்படி பணி ரூ. 37.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்கண்டவாறு பணி மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளத.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நெல்லிக்குப்பம் சாலை கருமாரியம்மன் கோவில் பகுதியிலிருந்து கெடிலம் ஆறு வரை அரசு தலைமை மருத்துவமனை வழியாக மூடிய மழைநீர் வடிகால்வாய் குழாய் அமைக்கும் பணி (Construction of closed storm water pipeline) | 37.00 |

மேற்படி, நெல்லிக்குப்பம் சாலை கருமாரியம்மன் கோவில் பகுதியிலிருந்து கெடிலம் ஆறு வரை அரசு தலைமை மருத்துவமனை வழியாக மூடிய மழைநீர் வடிகால்வாய் குழாய் அமைக்கும் பணியினை மேற்கொள்ள தேவையான நிர்வாக அனுமதியினை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் பெறவும் இப்பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தினை ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டும் பணியில் தெரிவிக்கப்பட்டுள்ள இதர இனங்களுக்கான செலவினத் தொகை (Lumsum amount) யிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இப்பணியினை மேற்கொள்ள தேவையான நிர்வாக அனுமதியினை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் பெறவும், பணி மேற்கொள்ள ஆகும் செலவினத்தினை ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டும் பணியில் தெரிவிக்கப்பட்டுள்ள இதர இனங்களுக்கான செலவினத் தொகை (Lumsum amount) யிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.ம.தீ. எண் 2086

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 06.02.2018

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் நகராட்சி.

# <u>கடலூர் பெருநகராட்சி</u>

**2018ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22–ம் நாள் வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு இந்நகர்மன்ற அவசரக் கூட்டம் கீழ்கண்ட பொருளை முடிவு செய்ய நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும்.**

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 22.02.2018

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் பெருநகராட்சி.

*பொருள்*

| | |
|---|---|
| 1. | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை பாரதம் திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பிடங்கள் 4332 எண்ணிக்கை கட்டி முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது தூய்மை பாரத திட்டத்தின் பரப்புரையாளர்கள் மூலம் மேற்படி தனி நபர் கழிப்பிடங்கள் கட்டும் பணியினை கள ஆய்வு செய்யப்பட்டதில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை காட்டிலும் கூடுதலாக 1500 எண்ணிக்கையில் கழிப்பறைகள் இல்லாத குடியிருப்புகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதால், அக்குடும்பங்களுக்கும் தனிநபர் கழிப்பறை கட்டுதல் அவசியமாகிறது. எனவே, இப்பணிகள் தூய்மை பாரதத் திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் அனுமதி கோரவும், மேலும் இப்பணிகளுக்கான மத்திய அரசு பங்குத் தொகை ரூ. 60.00 இலட்சம் மற்றும் மாநில அரசு பங்குத் தொகை ரூ.30.00 இலட்சம் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடமிருந்து பெறவும், நகராட்சி பங்குத் தொகை ரூ.30.00 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும், மேற்படி கூடுதலாக 1500 எண்ணிக்கை தனிநபர் கழிப்பிடங்கள் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கட்டவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு.– | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தூய்மை பாரதத் திட்டத்தின் கீழ் 1500 எண்ணிக்கை தனிநபர் கழிப்பறை கட்டும் பணி மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் அனுமதி கோரவும், மேலும் இப்பணிகளுக்கான மத்திய அரசு பங்குத் தொகை ரூ. 60.00 இலட்சம் மற்றும் மாநில அரசு பங்குத் தொகை ரூ. 30.00 இலட்சம் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடமிருந்து பெறவும், நகராட்சி பங்குத் தொகை ரூ. 30.00 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம். |

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 22.02.2018

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் நகராட்சி.